இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 146 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 21 – திங்கள்கிழமை 05 ஜனவரி 2026 – கோவை ★ ★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 146 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 21 - Monday 05 January 2026 - Kovai ★ ★ 16 Pages ₹ 5.00

## 20 ஆண்டுகாலக் கோரிக்கை நிறைவேறுகிறது!

# அரசு அலுவலர்கள் - ஆசிரியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



**சென்னை, ஜன.5-**

**தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபதாண்டுகாலக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதியத் திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டமான “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)” செயல்படுத்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

இதுதொடர்பாக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

ஆட்சி என்கிற வாகனத்தின் சக்கரங்களாக இருக்கக்கூடியவர்கள் அரசு அலுவலர்கள். அந்தச் சக்கரங்கள், மக்களுக்காக அரசு செயல்படுத்தும் திட்டங்களை கடைக்கோடி மனிதர் வரை கொண்டு சேர்க்கப் பயணிக்கின்றன. அதை உணர்ந்துள்ள அரசுதான் முத்தமிழறிஞர் கலைஞர் வழிவந்த திராவிட மாடல் அரசு. அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் காப்பதில் கலைஞர் வழியில் எப்போதும் அக்கறையுடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

2021ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றது முதல், அனைத்துத் தரப்பு மக்களின் நலன்களையும் காக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் மக்களுக்குக் கொண்டு செல்லும் மகத்தான பணியை மேற்கொண்டு, அரசின் கரங்களாக விளங்கக்கூடிய அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைக் காத்திடத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு எடுத்து வருகிறது.

தொடர்ந்து குறைக்கப்படும் ஒன்றிய அரசின் வரிப்பகிர்வு, திட்டங்களுக்கான ஒன்றிய அரசின் நிதி குறைக்கப்படுவது அல்லது முறையாக விடுவிக்கப்படாமல் இருப்பது, தமிழ்நாடு முன்னெப்போதும் கண்டிராத வளர்ச்சியை எட்டியிருப்பினும், ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள GST மாற்றங்களால் குறைந்து வரும் மாநிலத்தின் வரி வருவாய், உயர்ந்து வரும் நலத்திட்டச் செலவுகள் போன்றவற்றால் ஏற்படும் நிதிச்சுமைகளையும் தாண்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைத் தொடர்ந்து காத்து வருகிறார். அந்த வகையில்,

- கோவிட் பெருந்தொற்று காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அகவிலைப்படி உயர்வை 2022ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசிற்கு இணையாக உயர்த்தி வழங்கியதோடு, ஒன்றிய அரசுக்கு இணையாக காலதாமதமின்றி அகவிலைப்படி உயர்வு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.
- அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று, 01.10.2025 முதல் அரசுப் பணியாளர்கள் தங்களது ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்து பணமாகப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையை மீண்டும் அரசு செயல்படுத்தியுள்ளது.
- நாட்டிலேயே வேறெங்கும் இல்லாத புதிய திட்டமாக அரசுப் பணியாளர்கள், விபத்தில் உயிரிழக்க நேர்ந்தால், 1 கோடி ரூபாயும், இயற்கை மரணமடைந்தால் 10 இலட்சம் ரூபாயும், ஆயுள் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. பணியிடை மரணமடையும் அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் முதல் ரூபாய் 10 இலட்சம் வரை திருமணச் செலவிற்கான உதவியாகவும், மேலும், உயர்கல்வி பயில ரூபாய் 10 இலட்சம் வரை நிதியுதவியும் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.
- அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கான கல்வி முன்பணம் தொழிற் கல்விக்கு ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் 1 இலட்சமாகவும், கலை மற்றும் அறிவியல் கல்விக்கு ரூபாய் 25 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




10,00,000
மடிக்கணினிகள் வழங்கும் மாபெரும் விழா
தலைமை
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
முன்னிலை
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
நாள் : 5 - 1 - 2026, திங்கள்கிழமை, நேரம் : பிற்பகல் 3.00 மணி இடம் : சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம்.
செ.ம.தொ.இ. / 001 / வரைகலை / 2026